**அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட் மற்றும் அதன் துணைக் கம்பனிகள் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட்டினதும் (“கம்பனி”) மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (“தொகுதி”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினையும், பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனி மற்றும் அதன் தொகுதி நிதிக்கூற்றுக்களினால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (சி ம ந தொ இ நி அ த) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (சி ம ந தொ இ நி அ த) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

-------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனி தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை

ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அறிக்கை

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவான வியாபாரங்களுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை (சி.ம.அ.வி இற்கான இ.நி.அ.நி)

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 7.4 பிரிவிற்கு முரணான வகையில் செய்தித்தாள், முகவர்கள், நிரந்தர விளம்பரதாரர்கள், வீதியோர விற்பனையாளர்கள் ஆகியோரிடமிருந்து கிடைக்கப் பெற்ற செயற்பாட்டு வைப்புக்கள் மற்றும் வாடகை வருமானத்திற்கான முதலீட்டு வைப்புக்களின் பெறுமதி | குறித்துக் கொள்ளப்பட்டது. 2021 ஆம் ஆண்டிலே இந்த தவறை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நியமத்திற்கு இணங்கக் கூடிய வகையில் காசுப்பாய்ச்சல் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையே ரூபா 4,162,000 மற்றும் ரூபா 452,700 நிதி வழிகளிலான காசுப்பாய்ச்சலாக அடையாளங் காணப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஐந்தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 2,056,967 ஆன இரு தொகுதிகளான தொகை உருப்படிகள் பௌதீக இருப்பாக காணப்படவில்லை. | இரு தொகுதிகளான தொகை உருப்படிகள் பௌதீகமாக இருப்பில் இல்லை. | பௌதீக அளவாக இல்லாத ஐந்தொகையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | நியமத்தின் 17.19 பிரிவின் பிரகாரம் சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மீளாய்விற்குட்படுத்த வேண்டிய போதிலும் ரூபா 1,456,422,118 ஆன மேலும் பாவனைக்குட்படுத்துகின்ற முழுமையாக தேய்விற்குட்படுத்திய ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீளாய்விற்குட்படுத்தி அல்லது கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டிற்குள் கம்பனி ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆக்கபூர்வமான பொருளாதார காலத்தை மீளாய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நாட்டிற்குள் நிலவிய கொவிட் 19 நிலைமையின் பெறுபேறாக இவற்றை எதிர்வரும் வருடங்களில் மேற்கொள்ளப்படுமென்பதுடன் இந்த வருடத்திற்குள் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நியமத்தின் வழிகாட்டலுக்கு இணங்க முழுமையாக தேய்விற்குட்படுத்திய ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 21.14(பீ)(சீ) மற்றும் (டீ) பிரிவின் பிரகாரம் கம்பனிக்கு எதிராக காணப்படுகின்ற சட்ட வழக்குகள் 19 க்கு உரிய நட்டயீடு செலுத்துதலின் நிச்சயமற்ற தன்மை மற்றும் காலத்தை அடையாளங்காணுதல், ஏதாவது பெறுபேறொன்றாக எதிர்பார்த்த நட்டயீட்டை அல்லது அறவிடப்படுகின்ற அளவு மற்றும் காலம், பொறுப்பின் தன்மை தொடர்பாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், பொறுப்புக்களின் தன்மை மற்றும் அளவு தொடர்பான விடயங்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு கம்பனிக்கு முடியாதுள்ளது. கம்பனிக்கு எதிராக விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற 31 வழக்குகளின் தீர்ப்பை எதிர்பார்த்திருப்பதுடன் ஏற்பாடுகள் தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 19 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன் அனைத்து விபரங்களையும் பரிசீலிப்பதற்கு கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் ஏதாவது பெறுபேறொன்றாக எதிர்பார்த்த நட்டயீட்டை செலுத்துகின்ற தன்மை அளவு, மற்றும் காலம் என்பன வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கம்பனிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளுக்காக இழப்பீடு தொகையின் பெறுமதியில் நூற்றுக்கு 0.4 ஏற்பாடுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியினால் நிதி அறிக்கைப்படுத்தும் திகதியையும் ஏற்பாட்டு மீளாய்விற்கு உட்படுத்தி கட்டுப்பாட்டை தீர்ப்பதற்காக தேவையான நிதியில் சரியான மதிப்பீடு சிறிய மற்றும் நடுத்தர அளவுடைய தொழில் முயற்சியாளர்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 21.11 பிரிவின் பிரகாரம், அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட வழக்கிற்கான சரியான மதிப்பீட்டை அளவிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. | சிறிய மற்றும் நடுத்தர அளவான வியாபாரங்களுக் கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 21.11 பிரிவின் பிரகாரம் கம்பனியினால் அனைத்து அறிக்கையிடும் திகதியிலும் ஏற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டு பொறுப்புக்களை செலுத்துவதற்கு தேவையான நட்டயீட்டுத் தொகை அளவிற்கான சரியான மதிப்பீட்டை அறிக்கைப்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | இரண்டு வெளித்தரப்பினர்களினால் கம்பனியிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளுக்கான இழப்பீடாக ரூபா 3,000,000 மற்றும் ரூபா 10,000,000 செலுத்தும்படியாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், கம்பனியினால் இந்த கட்டுப்பாட்டின் முழுமையான அளவை நிதிக்கூற்றுக்களில் அடையாளங் கண்டிருக்கவில்லை. | சட்ட வழக்கிற்கான சரியான மதிப்பீட்டை அளவிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. | ரூபா 3,000,000 மற்றும் ரூபா 10,000,000 செலுத்துவதற்கு நீதிமன்றம் தீர்ப்பொன்று பெற்றுக் கொடுத்திருப்பதுடன் ஏற்பாடுகள் முழுவதையும் அடையாளங் காணப்பட வேண்டும். |
| (எ) | சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 21.15 பிரிவின் பிரகாரம், தனிஇயங்கி பெறுகை முகாமைத்துவ கட்டமைப்பை நிறுவுவதற்கு உரிய கொடுப்பனவிற்கான எஞ்சிய பெறுமதியான ரூபா 1,300,000 நிகழத்தக்க பொறுப்புக்களாக கம்பனியால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. இந்தக் கட்டமைப்பு 2020ஆம் ஆண்டிலே முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத துடன் 2021 ஆம் ஆண்டாகும் போது முழுமைப்படுத்தப்படும் அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிலே முழு கிரயமும் அடையாளங் காணப்படும். | நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 இணக்கப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் பௌதீக இருப்போடு இணக்கப்படுத்தும் போது ரூபா 4,841,848 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் அடையாளப்படுத்தப் படாத வேறுபாட்டை தீர்ப்பனவு செய்ய வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் வியாபாரக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 828,071,121 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 662,071,986 பெறுமதியான 732 கடன்பட்டோர்களினது உறுதிப்படுத்தல் கோரப்பட்டிருந்தது, எவ்வாறாயினும், 2020 ஏப்ரல் 22 ஆந் திகதியில் கடன்பட்டோரில் ரூபா 42,734,272 பெறுமதியான 68 கடன்பட்டோர் மாத்திரம் பதிலளித்து இருந்ததுடன் அது நூற்றுக்கு 06 சதவீதமாக காணப்பட்டதுடன் கடன்பட்டோர் ரூபா 14,623,502 பெறுமதியான 22 கடன்பட்டோர் கம்பனியின் மீதியுடன் இணங்கியிருந்தது. அத்தோடு வியாபாரக் கடன்பட்டோர்களில் ஒரு வருடத்தை விஞ்சிய வியாபாரக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 141,307,398ஆக காணப்படுவதோடு கடனை அறவிட முடியாமல் சட்ட பிரிவிக்கு அனுப்பப்பட்ட வியாபாரக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 33,220,477 | கணக்காய்வாளர் திணைக்களத்தினால் இணங்கியதன் பிரகாரம் ஏஎன்சீஎல் இனால் ரூபா 200,000 க்கு அதிகமான கடன்பட்டோருக்கு உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஒரு சில கடன்பட்டோர் மாத்திரம் மறுமொழி அளித்திருந்ததுடன் இந்த நிலைமை எங்களுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்திற்கான மறுமொழி (இணங்கி அல்லது இணங்காத) வழங்காத போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவை மீதகள் பெரும்பாலும் 2021 மே 06 ஆந் திகதியாகும் போது செலுத்தப்பட்டிருந்தது.<br><br>கூட்டுமொத்தம் ரூபா 141,307,398 ஆன ஒரு வருடத்திற்கு அதிக காலம் செலுத்தப்படாத வியாபார கடன்பட்டோரின் கீழ் காட்டப்படுகின்ற மீதியை அறவிட முடியாக் கடனாக ஏற்பாட்டில் வேறாக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் பேரேட்டில் உள்ள மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கடன்பட்டோரிட மிருந்து உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.<br><br>நிலுவை மீதிகளை அறவிட:டக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆககாணப்பட்டதுடன் அது நூற்றுக்கு 24 சதவீதமாகும். | கூட்டுமொத்தம் ரூபா 33,220,477 நீதிமன்ற பேரேட்டின் கீழ் காட்டப்படுகின்ற மீதி நிலுவைக் கடனை அறவிடுவதற்காக அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் பிரதிநிதித்துவப்படுத்தும். | |
| (ஆ) | குறித்த ஊழியர்கள் ஓய்வுபெறுதல், சேவையை நிறைவு செய்தல் அல்லது மரணம் காரணமாக கம்பனியிலிருந்து நீங்கியதன் காரணமாக 01 வருடத்திலிருந்து 20 வருடங்கள் வரையான காலம் அறவிடப்படாத மொத்தம் ரூபா 6,881,484 தொகை மீதியும் ஊழியர்களின் கிடைக்க வேண்டிய மீதியினுள் காணப்படுகின்றது. | இந்த மீதி ஓய்வுபெறுதல் அல்லது மரணமடைதல் காரணமாக சேவையை நிறைவு செய்வதனால் தற்போதும் எஞ்சியுள்ள ஊழியர்களின் பெறப்படவேண்டிய பணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிக்கொடை அதிகாரச் சட்டத்தின் ஊடாக இந்த பெறப்பட வேண்டிய பணத்தை குறைத்துக் கொள்வதற்காக ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன் கம்பனிக்கு இந்த பணத்தை இறுதி பணிக் கொடையிலிருந்து குறைத்துக் கொள்ள முடியாது. மேலும் சேம நிதிய ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிய மீதியில் 25 சதவீதம் கட்டாயமாக விடுவிக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் பெறப்பட வேண்டிய பதவியணியினர் மீதிகளுக்காக மேலும் குறைத்துக் கொள்ளல் செய்ய முடியாது.<br><br>எவ்வாறாயினும் மேற்குறித்த பதவியணியினரிடமிருந்து பெற வேண்டிய பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு கம்பனி கீழ் குறிப்பிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.<br><br>• சேவையை நிறைவு செய்துள்ள ஊழியர்களுக்கு எஞ்சியுள்ளதை | கடன் வழங்கும் சந்தர்ப்பத்திலே ஊழியர்களின் வயது, மீண்டும் அறவிட்டுக் கொள்ளக் கூடிய வல்லமை மற்றும் தகுதி தொடர்பான மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்ப்பனவு செய்யுமாறு அறிவித்து ஞாபகமூட்டல் கடிதத்தை அனுப்புதல்.<br>• உரிய பிணையாளர் களின் தீர்ப்பனவு செய்யப்படாத இடர் கடன் மீதியின் மூலம் தீர்ப்பனவை மேற்கொள்வதற்கு தற்போதே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | |
| (இ) | கம்பனி அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு கம்பனியின் வெளியீட்டிற்காக பங்களிப்பு செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் இறுதி வருடத்திற்கான பங்களிப்பு கணக்கின்அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 14,899,522 ஆக காணப்பட்டது. அவற்றில் ரூபா 2,171,715 ஆன மீதி 2011 இல் இருந்து 2020 வரை நிலுவையாக காணப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியிலும் இந்த பெறுமதியை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை. | பங்களிப்பு தொகையின் அடிப்படையில் பெரும்பகுதி அரச பிரிவிற்கு தொடர்புடையது. இதற்கு முன்பு அரச மற்றும் தனியார் ஆகிய இரு பிரிவிற்கும் கடன் வசதிகள் உதவி மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் கடன் வசதிகள் பெற்றுக் கொடுத்தல் முறைமைப்படுத்தலின் பெறுபேறாக தனியார் பிரிவின் பங்களிப்பாளரிடமிருந்து நிறுத்தப்பட்டிருந்தது.<br><br>அரச பங்களிப்புக்காக கொடுக்கப்பட்ட ஒரு வருட கடன் வசதியும் மூன்று மாதங்களுக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. நாட்டிற்குள் நிலவுகின்ற கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக அரச பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டுள்ள கொவிட் 19 வழிகாட்டல்களை பிற்பற்றப்பட வேண்டியதன் காரணமாக பங்களிப்புத் தொகையை சேகரிப்பது சிரமமான விடயமாகவுள்ளது. இந்த தடைகளின் மத்தியிலும் சேகரிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | பங்களிப்பின் அடிப்படையில் செய்திப் பத்திரிகை விநியோகிக்கும் போது அறவீடுகளும் அவதானிக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபம் | | | |
| (i) 9.3.1 ஆம் பிரிவு | கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு முன்மொழிவு முறைக்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பொது முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. பொது முயற்சிகள் திணைக்களத்தின் வெளியீட்டு பட்டியலின் பிரகாரம் ஏஎன்சீஎல் அதன் திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டதல்ல. அதனால் நிர்ணயிக்கப்பட்ட சுற்றுநிருபம் ஏஎன்சீஎல் இற்கு உரியதொன்றல்ல. | கம்பனிக்கு பொது முயற்சிகள் சுற்று நிருபங்களிலிருந்து விலகியிக்க வேண்டிய தேவை இருந்தால், வழி காட்டல் ஒன்றை பெற்று கொள்ள வேண்டும். |
| (ii) 9.4 ஆம் பிரிவு | இந்த பிரிவிற்கு முரணாக, மீளாய்வாண்டிற்குள் அரச நிறுவனத்திற்காக ஒன்பது பத்திரிகையாளர்கள் நான்கு பதிப்பாசிரியர்கள் உதவி முகாமையாளர், புகைப்பட கலைஞர், சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி மற்றும் காசாளர் உள்ளடங்கலாக பதினேழு பேர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், கம்பனி அவர்களின் சம்பளம், வேதனங்கள், மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 5,476,800 வை செலவிட்டிருந்தது. ஒன்பது பத்திரிகையாளர்கள் மற்றும் நான்கு பதிப்பாசிரியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டிற்குள் | சனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் ஊடகவியல் அமைச்சினால் எங்களுடைய ஊழியர்கள் சிலரின் தேவையைப் பெற்றுத் தருமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக் கிணங்க அவர்களை சம்பளத்துடன் விடுவிக்க முகாமைத்துவம் அங்கீகாரம் வழங்கியிருந்தது. | கம்பனிக்கு பொது முயற்சிகள் சுற்று நிருபத்திலிருந்து விலகியிருக்க வேண்டியத தேவை இருந்தால் அதற்காக அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருபத்தாறு பத்திரிகையாளர்கள் மற்றும் இருபத்து மூன்று பதிப்பாசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | 7.4.1 ஆம் பிரிவு | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது ஒழுங்காக காட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிலே எவ்வித குழுக் கூட்டமும் இடம்பெறவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | பொது முயற்சிகள் சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் இடம்பெற வேண்டும். |
| (iv) | 5.2.5 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு, வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்குள் குறைவில்லாத காலத்திலே நிரல் அமைச்சு, பொது தொழில்முயற்சி திணைக்களம், பொதுத்திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இருப்பினும், கம்பனி இதற்கு இணங்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | பழக்கமொன்றாக அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பெறுகைகள் திட்டத்தின் பிரதியொன்று ஊடகவியல் அமைச்சிற்கு மாத்திரம் அனுப்பப்படும் வருடாந்த பாதீட்டுப் பிரதியொன்று (வருமானங்கள் மற்றும் செலவுகள் பாதீடு மற்றும் கெபெக்ஸ் பாதீடு) நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. | பொது முயற்சிகள் சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடனான இறுதி நாளதுவரையாக்கப்பட்ட பாதீட்டுப் பதிவேடு அடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் நிரல் அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத்திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் செயற்பாட்டுப் விளைவு ரூபா 217,840,000 நட்டமொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் நட்டம் ரூபா 216,105,000 ஆகும். அதன்படி நிதி விளைவில் ரூபா 1,735,000 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டிற்குள் நிர்வாகச் செலவுகள் மற்றும் நிதிச் செலவுகளின் அதிகரிப்பு பிரதானமான காரணமாக காணப்பட்டது.

சென்ற வருடங்களுக்கிடையில் மற்றும் மீளாய்வாண்டின் கம்பனியின் நிதி விளைவினை பகுப்பாய்வு செய்யும் போது 2016 இல் இருந்து 2020 வரையான பெறுமத் சேர்த்தலில் தளம்பல் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் சம்பளம் மற்றும் தேய்வடைதலை கவனத்திற் கொண்ட பின்னர் (இலாபம் மற்றும் நியாயமான தொகையை சீர் செய்வதற்கு முன்னர்) 2019 ஆம் ஆண்டின் நேர் நூற்றுக்கு 7 க்கு இணையாக 2020 ஆம் ஆண்டின் நூற்றுக்கு 27 குறைவொன்று காண்பிக்கப்பட்டு பெறுமதி ஒன்று சேர்தல் முறையே ரூபா 1,456,099,000 மற்றும் ரூபா 1,061,269,000 ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | பெறுமதி ரூபா '000 | | | | |
|---|---|---|---|---|---|
| | **2020** | **2019** | **2018** | **2017** | **2016** |
| வரி பின்னர் இலாபம் (இலாபம் மற்றும் நியாயமான தொகையை சீர் செய்வதற்கு முன்னர்) | (196,155) | (189,856) | (152,897) | 180,015 | 32,239 |
| ஊழியர் சம்பளம் | 1,187,819 | 1,552,385 | 1,420,009 | 1,288,996 | 1,331,922 |
| வீஆர்எஸ் கிரயம் | - | - | - | - | 163,513 |
| தேய்வடைதல் | 69,605 | 93,570 | 88,825 | 89,401 | 83,344 |
| **முழு பங்களிப்பு** | **1,061,269** | **1,456,099** | **1,355,937** | **1,558,412** | **1,611,018** |
| முன்னைய வருடத்துடன் இணங்கும் போது சதவீத அதிகரிப்பு / குறைவு | (27)% | 7% | (13)% | (3)% | 11% |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்வைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் முக்கிய கணக்கீட்டு விகிதம் சில கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **2020 சதவீதம்** | **2019 சதவீதம்** |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | 51.75 | 47.02 |
| புள்ளியிடப்பட்ட இலாபம்( விற்பனை கிரயத்தின் அடிப்படையிலான மொத்த இலாபம்) | 107.28 | 88.75 |
| உள்வருகையின் அடிப்படையிலான நிர்வாக கிரயம் | 51.88 | 44.89 |
| உள்வருகையின் அடிப்படையிலான விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் கிரயம் | 16.25 | 12.28 |
| உள்வருகையின் அடிப்படையிலான நிதி கிரயம் | 3.49 | 3.47 |
| நடைமுறை விகிதம் | 1.70 | 1.51 |
| திரவ விகிதம் | 1.25 | 1.03 |
| முதலிட்ட மூலதனத்தின் அடிப்படையில் வருமானம் | (28) | (23) |

முன்னைய வருடத்திற்கு இணையாக மீளாய்வாண்டிற்காக கம்பனியின் மொத்த இலாப விகிதம் மற்றும் புள்ளியிடப்பட்ட இலாபம் முறையே நூற்றுக்கு 4.73 இனாலும் நூற்றுக்கு 18.53 இனாலும் அதிகரித்திருந்தது, முன்னைய வருடத்திற்கு இனையாக மீளாய்வாணடிலே உள்வருகையின் அடிப்படையிலான நிர்வாக கிரயம் நூற்றுக்கு 6.99 இனால் அதிகரித்திருந்தது. முதலிட்ட மூலதனத்தின் அடிப்படையில் வருமானம் நூற்றுக்கு மறை 28 ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 26,800,895 பெறுமதியான 263 காசோலைகள் மதிப்பிழந்து காணப்பட்டது. அதில் ரூபா 2,155,046 பெறுமதியான 60 காசோலைகள் மற்றும் ரூபா 216,802 பெறுமதியான 10 காசோலைகளும் முறையே 5 வருடங்கள் மற்றும் 3 வருடங்களை விட அதிக காலம் நிலுவையாக காணப்படுகின்றது. | கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ள பட்டியலின் விளம்பர வருமான பேரேடு, நிரந்தர பாவனையாளர் பேரேடு, மற்றும் செய்திப் பத்திரிகை முகவர்கள் பேரேட்டுக்குரிய மதிப்பிழந்த காசோலைகள் காணப்பட்டது. அந்த பட்டியலினுள் மதிப்பிழந்த காசோலைகளின் கீழுள்ள தகவல்கள் காணப்பட்டன.<br>• காசோலைகளின் மீண்டும் கிடைத்த திகதி<br>• சேவை வழங்குனரின் பெயர்<br>• காசோலை இலக்கம்<br>• காசோலையின் பெறுமதி<br>• மதிப்பிழந்த காசோலையின் தற்போதைய நிலை | நிலவுகின்ற கட்டமைப்பை கவனமாக செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | கம்பனி 1200 பங்குகளை கொள்வனவு செய்வதற்காக 2008 திசெம்பர் மாதத்தில் ரூபா 1,200,000 தொகை இடைக்கால கொடுப்பனவொன்றாக லங்கா புவத் கம்பனி - இலங்கை தேசிய பத்திரிகை முகவர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தபோதும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியாகியும் எவ்வித பிரதிபலனொன்றும் கிடைத்திருக்கவில்லை. மேலும் 2017 ஆம் ஆண்டிலே வரையறுக்கப்பட்ட லங்கா புவத் கம்பனியின் மூன்று ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் வேதனங்களாக செலுத்தப்பட்ட ரூபா 2,194,637வை அறவிடபடாமல் | குறித்துக் கொள்ளப்பட்டது. பணிப்பாளர் சபை தீர்மானம் எல்கேபீ 202.17 ஐ அடிப்படையாக வைத்து ஏஎன்சீஎல், லங்கா புவத் கம்பனியின் 1200 பங்குகள் முதலிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிலே இரண்டு ஊழியர்கள் அப்போதே விலகியிருந்ததுடன் ஒரு ஊழியர்கள் ஏஎன்சீஎல் சேவை பட்டியலுக்கு இணைக்கப்பட்டிருந்தார். புதிய வர்த்தமானி அறிவித்தலில் (2020 ஆகஸ்ட் 10) இந்த நிறுவனம் ஊடக அமைச்சின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் விடப்பட்டிருந்தது. | பலன்களை பெற்றுக் கொள்வதற்காக முதலீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்கப் பெறவேண்டியதாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | 720 தினங்களுக்கு அதிக காலம் நிலுவையாக காணப்பட்ட மொத்தம் ரூபா 7,673,033 ஆன கடனை அறவிடுவதற்கான எட்டு கடன்பட்டோர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள கம்பன தவறியிருந்ததுடன் அவர்களோடு மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய ஆவணங்கள் தவறியிருந்தது இதற்கு காரணமானது. | குறித்துக் கொள்ளப்பட்டது. உரியதிணைக்களத்தில் கொடுக்கல் வாங்கலுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததன் காரணமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. சரி செய்வதற்கு மற்றும் இவ்வாறான விடயங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆவணங்களின் பாதுகாவல் தொடர்பாக பொறுப்புக்கள் நிச்சயிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1981 ஒக்டோபர் 14 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 162/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ‘‘பத்திரிகையாளர்களுக்கான ஒழுக்க நெறிகள்’’ வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது கம்பனிக்கு எதிராக 15 அவதூறு வழக்குகள் தாக்கல் யெ்யப்பட்டிருந்தது. கம்பனிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 15 அவதூறு வழக்குகளில் ஒரு வழக்கு 2007 நவம்பர் 18 ஆந் திகதி வார இறுதி செய்திப்பத்திரிகையான ‘‘சிலுமின’’ செய்திப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை சம்பந்தமாக வாதியினால் கம்பனியிடமிருந்து ரூபா 500 மில்லியன் நட்டஈடு கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கு 2010 ஆம் ஆண்டிலே கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கூட்டப்பட்ட சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தின் பிரதிவாதி மற்றும் கம்பனிக்காக தோற்றுகின்ற வழக்கறிஞர் | கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அந்த வழக்கின் நடவடிக்கைகளை பரிசலீக்கும் போது 2010 ஒக்தோபர் 20 ஆந் திகதி மாவட்ட நீதிமன்றத்தின் 3 ஆம் இலக்கத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டதுடன் பிரதிவாதி தரப்பினரின் வழக்கறிஞர் 1 ஆம் இலக்க நீதிமன்றத்தில் இருந்ததுடன் ஒரு தரப்பு வழக்கு விசாரணையாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.<br><br>பிரதிவாதிக்காக தோற்றவில்லை என்பதுடன் பிரதிவாதிக்கு (ஏஎன்சீஎல்) எதிராக ஒரு தரப்பு வழக்கு விசாரணையாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு 2010 ஒக்தோபர் 20 ஆந்திகதி விசாரணைக்கு எடுப்பதாக இருந்தது. 2010 செப்தெம்பர் 30 ஆந் திகதி வாதியின் பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞரினால் வாதி வெளிநாடு சென்றுள்ளதாகவும் 2010 ஒக்தோபர் 20ஆந் திகதி சமூகந்தர முடியாதுள்ளதாக மோசமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கம்பனிக்கு எதிராக காணப்படுகின்ற அவதூறு வழக்குகளை குறைத்துக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

உரிய அறைக்கு சமூகமளித்திருக்கவில்லை. அதனால் வழக்குத் தீர்ப்பு வாதிக்கு சாதகமாக பெற்றுக் கொடுப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்திருந்தது. கம்பனி இந்த தீர்ப்புக்கு எதிராக கம்பனி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மற்றும் சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் தொடுக்கப்பட்டிருந்தபோதிலும் அந்த இரண்டு மேன்முறையீடுகளும் நிராகரிக்கப்பட்டிருந்தது. பின்னர், 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதியில் பணிப்பாளர் சபையினால் அவர்கள் தீர்மான இலக்கம் கு104.19 ஊடாக உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் மற்றும் கம்பனிக்காக தோன்றுவதற்கு சிரேஷ்ட சனாதிபதி வழக்கறிஞர் ஒருவரும் அவரின் உதவியாளரையும் தெரிவு செய்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் அவர்களின் முழுமையான சட்ட கட்டணமாக மொத்தம் ரூபா 18,230,000 தொகை 2019 ஒக்டோபர் 09 ஆந் திகதி செலுத்தப்பட்டதுடன் இந்த வழக்கிற்காக தவறான நீதிமன்ற அறைக்கு சமூகம்தந்த வழக்கறிஞராலேயே பணிப்பாளர் சபைக்கு உரிய சிரேஷ்ட சனாதிபதி வழக்கறிஞரை தெரிவு செய்வதற்கு வழிவகுக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த வழக்கறிஞர் 2020 ஏப்ரல் 08 ஆந் திகதி ஓய்வுபெற்றிருந்ததுடன், 2020 மே 15 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் நியமிக்கப்பட்டிருந்தார். இதுவரை இந்த உத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் அதனால் எவ்வாறாயினும் உரிய தினத்தில் வழக்கை விசாரிப்பதற்கு முடியவில்லை.

எவ்வாறாயினும் இந்த வழக்கு 3 ஆம் இலக்க மாவட்ட நீதிமன்றததில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன்போது வாதிக்கு நீதிமன்றத்திற்கு சமூகந்தர முடியாதென்பதை மோசமொன்றினால் தெரிவிக்கப்பட்டுள்ளதை நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல், வாதியின் பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞரால் பிரதிவாதி தரப்பின் வழக்கறிஞர் சமூகந்தராததை தனக்கு சாதகமாக பயன்படுத்தி ஒரு தரப்பு வழக்கு தீர்ப்பொன்று பெறப்பட்டிருந்தது.

ஒரு தரப்பு தீர்ப்பை ஒழிப்பதற்காக சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று தொடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அந்த மேன்முறையீடும் சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட உதவியை எதிர்பார்த்து இந்த வழக்குதற்போது உச்ச நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு முடிவுக்கு அண்மிக்கவில்லை என்பதுடன் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரித்து முடியும் வரைக்கும் மாவட்ட நீதிமன்றம் வழங்கிய ஒரு தரப்பிலான தீர்ப்பை நடைமுறைப்படுத்த முடியாது. அதனால் ஏனன்சீஎல் மூலம்

மேற்கொண்டிருக்கவில்லை.

கம்பனியின் வழக்கறிஞருக்கு தொழில்சார் கவனயீனத்தின் அடிப்படையிலான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளல் தொடர்பான தீர்மானம் மேற்கொள்வதில் நான் தவறியுள்ளேன்.

2020 மே 15 ஆந் திகதியிலிருந்து 2020 நவம்பர் 14 ஆந் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் அந்தப் பெண் உத்தியோகத்தரின் சேவையை மேலும் 6 மாதங்களுக்கு நீடித்து சேவை நீடிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு நேர்ந்தது. 2020 மார்ச் 11 ஆந் திகதியில் இருந்து கொவிட் 19 பரவியதன் பின்னர் காணப்பட்ட நிலைமையின் கீழ் உரிய அனைத்து ஆவணங்கள் தொடர்பான நெருங்கிய ஒரே உத்தியோகத்தராக காணப்பட்டதால் மற்றும் சிறிய காலத்திற்கு நீடிப்பதை தவிர்த்து அப்பெண் உத்தியோகத்தரின் சேவையை இடைநிறுத்தினால் அப் பெண்உத்தியோகத்தர் முகாமைத்துவத்திற்கும் பணிப்பாளர்சபைக்கும் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தலாம் என்பதனாலாகும். எவ்வாறாயினும் அந்த நீடிப்பு காலம் நிறைவடைந்ததன் பின்னர் அவருக்கு மேலும் சேவை நீடிப்பு பெற்றுக் கொடுக்கப்படவில்லை. பின்னர் அப் பெண்ணுக்கு பதிலாக 2020.11.15 ஆந் திகதியில் இருந்து அமுலாகும் வகையில் புதிய நியமனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஆதன அபிவிருத்தி வியாபாரத்திற்காக 1985 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ப்ரபர்ட்டி டெவலப்மன்ட் (தனியார்) கம்பனி, செயற்பாட்டு நடவடிக்கைகளில் எவ்வித காசுப் பாய்ச்சலொன்றினையும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கானப்படவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. | செயற்படுத்தப்படாத நிறுவனங்கள் தொடர்பாக தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டும். |

**3.2 செயற்பாட்டு பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்கு அதற்குரிய வெளியீடுகளை அச்சிடுவதற்காக மூன்று இயந்திரங்கள் காணப்பட்டபோதும், ‘‘கொஸ் அர்பன் லைனர்’’ மற்றும் ‘‘எம் ஹரிஸ்’’ ஆகிய பெயர்களில் உள்ள இரண்டு இயந்திரங்கள் முறையே 1993 மற்றும் 1979 இல் இருந்து பாவனைக்குட்படுத்தி வருகின்ற போதிலும் தொழில்நுட்ப நிலைமை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. எவ்வாறாயினும், பெரிய அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக புதிய இயந்திர உபகரணங்களுக்காக முதலீட்டை மேற்கொள்வதற்கான கம்பனிக்கு வல்லமை காணப்படவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. ஊடகவியல் அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் உதவியோடு புதிய வெப் அச்சு இயந்திரத் தொகுதியொன்றை கொள்வனவு செய்வதற்கு கம்பனி திட்டமிடப்பட்டுள்ளது. | இயந்திரங்களின் தொழில்நுட்ப நிலையை முகாமைத்துவம் செய்வதற்கு முறையான நடவடிக்கையொன்று எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 வருடத்திலே ‘‘ரெஸ’’ மற்றும் ‘‘தினகரன்’’ என பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு செய்திப் பத்திரிகைகளின் கெட்டுப்போதல் முறையே நூற்றுக்கு 10 மற்றும் நூற்றுக்கு 12 வரையாக அதிகரித்து காணப்பட்டது. | வெப் ஒப்செட் அச்சு இயந்திரம் பாவனைக்குட்படுத்தப்பட்டது. வாகர் அச் இயந்திரத்தின் கட்டளையினாலேயாகும். அச்சுக் கட்டளை குறைவடையும் போது கெட்டுப் போதலின் சதவீதம் இயல்பாக அதிகரிக்கும். | கெட்டுப்போதலை குறைத்துக் கொள்ளக் கூடிய வழிவகைகளை கம்பனி அடையாளங் காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே ‘‘சரசவிய’’ ‘‘ஆரோக்கியா’’ மற்றும் ‘‘வண்ணவானவில்’’ என பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 03 வாரச் சஞ்சிகைகளும் முறையே நூற்றுக்கு 12, நூற்றுக்கு 14 மற்றும் நூற்றுக்கு 15 கெட்டுப்போதலில் அதிகரிப்பொன்று காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | 3 மாதங்களுகடகுள் சமர்ப்பிக்கப்படாத 69 காசோலைகள் ரூபா 43,546,959ஆக காணப்படுவதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறைக் கணக்கில் 03 மாதங்களை விஞ்சிய நேரடியாக அனுப்பப்பட்ட பணத்தில் ரூபா 4,938,221 பெறுமதியான 277 காசோலைகள் பரிசீலிக்காமல் காணப்பட்டது. | 3 மாதங்களிலிருந்து 09 மாதங்கள் வரையான காலததிற்குள் தெளிவுபடுத்தப்படாத ரூபா 590,807 ஆன 18 காசோலைகள் தொடர்பாக இலங்கை வங்கியிடம் அனைத்து விபரங்களும் கேட்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவுகின்ற நிலைமை காரணமாக கம்பனிக்கு உரிய தகவல்கள் அண்மையில் இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்டது. அந்த தகவல்களின் பிரகாரம் கம்பனி 2021 மே மாதம் முடிவடையும் போது தெளிவுபடுத்தப்படாத வைப்பு பட்டியலொன்று அகற்றப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்படாத ரூபா 43.5 மில்லியன் ஆன காசோலைகளில் ரூபா 41 மில்லியன் காசோலைகள் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிடட் இன் சேம நிதியத்திற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த விடையளிக்கும் திகதியாகும் போது கம்பனி காசோலையை மீண்டும் செல்லுபடியாக்கி விநியோகித்திருந்தது. | வைப்புச் செய்யப்படுகின்ற விநியோகிக்கப் படுகின்ற காசோலைகளை நிர்வகிப்பதற்காக கம்பனியினால் முறையான உள்ளக கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஈ) | வழக்கமொன்றாக கம்பனியினால் முகாமைத்துவம், சில நிறைவேற்று அதிகார தரத்திலான ஊழியர்கள், சனாதிபதி,பிரதமர், வெகுசன ஊடக அமைச்சர், | பல்வேறு குழுக்களுக்கு இலவசமாக பிரதிகள் அனுப்புதல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் திரும்பியுள்ளது. அண்மைக் காலமாக நிறுவனப் பிரிவிற்கு இலவசமாக | இலவசமாக பிரதிகள் பெற்றுக் கொள்ளும் தரப்பனர்களை அடிக்கடி நாளதுவரையாக்கப் பட வேண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சுக்களின் செயலாளர்கள், முன்னால் முகாமைத்துவு உறுப்பினர்கள், மற்றும் 20 வருடங்களை விட அதிக சேவைக்காலத்தைக் கொண்டுள்ள ஊழியர்கள் என்பதோடு 25 வருடங்கள் சேவைக்காலத்தை பூரணப்படுத்தி ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு வெளியீடுகளின் பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குள் பிரதானமான ஏழு செய்திப்பத்திரிகைகளின் 1,005,525 பிரதிகள் மற்றும் 14 சஞ்சிகைகளின் 78,285 பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டிருந்தது. அச்சிடப்பட்ட பிரதிகளில் கூடுதலானவை இலவசமாக வழங்கப்பட்ட பிரதிகளின் அளவு காணப்பட்டது, நூற்றுக்கு 16 விநியோகிக்கப்பட்ட ‘‘தினமின’’ ஆகும். இந்த இலவசமாக விநியோகிக்கப்பட்ட பிரதிகளுக்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 66,234,169 ஆகும். | பிரதிகள் அனுப்பும் நடைமுறையை மீளாய்வு செய்து, கிரயத்தை குறைத்துக் கொள்வதற்காக நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் அண்மைக்காலமாக செய்தியாளர்களுக்கும் இலவசமாக பிரதிகள் விநியோகிப்பததை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவத்தின் கொள்கையின் அடிப்படையில் 20 மற்றும் 25 வருடங்கள் சேவைக்காலத்தை பூர்த்தி செய்த ஓய்வூதிய சேவையாளர்களுக்கு இலவசமாக பிரதிகள் வழங்கப்படும். | குறைத்துக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குள் 7 செய்தித்தாள்களின் மூலம் மற்றும் 14 சஞ்சிகைகள் மூலம் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட மொத்த பிரதிகளின் எண்ணிக்கை 3,003,922 ஆகு காணப்பட்டதுடன் கூடுதலாக மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட பிரதிகளாக பதிவானது, ‘‘தினமின’’ செய்தி பத்திரிகை என்பதுடன் அது நூற்றுக்கு 21 சதவீதமாகும். | 2019 மற்றும் 2020 வருடங்களில் விற்பனை இலக்கை ஒப்பிட்டுப் பார்க்கும் போது கொவிட்19 தொற்று நிலைமையை கவனத்திற் கொள்ளுதல் முக்கியமானதாகும். 2020 மார்ச், ஏப்ரல் மற்றும் ஒக்தோபர் நடுப்பகுகியாகும் போது முழுநாடும் மூடப்பட்டிருந்தது. இந்த கட்டுப்படுத்த முடியாத தொற்று நிலைமைகாரணமாக விற்பனை வருமானம் நூற்றுக்கு 30 இல் குறைந்திருந்தது. எவ்வாறாயினும், எங்களுடைய விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்காக | மீண்டும் கிடைக்கப் பெறுகின்ற பிரதிகளை குறைததுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நாங்கள் குழுவொன்றாக கொவிட் 19 தொற்று நிலைமையோடு போராடிக் கொண்டிருக்கின்றோம். | |

**3.3 விளைவற்ற அல்லது குறை உபயோகமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீடமைப்புத் திட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஹோகந்தர பிரதேசத்தின் 8 ஏக்கர் நிலப்பரப்பு 1985 ஆம் ஆண்டு தொடக்கம் விளைவற்றுக் காணப்படுகின்றது. | குறித்துக் கொள்ளப்பட்டது. 2013 ஆம் ஆண்டிலே லேக் ஹவுஸ் பர்ப்பர்ட்டி டிவலொப்மென்ட் கம்பனியினால் ஹோகந்தர காணியின் உரிமையை ஏஎன்சீஎல் இக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் வீஆர்எஸ் மற்றும் மூலதன தேவைப்பாட்டிற்காக 2016 ஆம் ஆண்டிலே கொமர்ஸ்ல் வங்கியிலிருந்து கடன் பெற்றுக் கொள்வதற்காக அடகு வைக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் சொத்துக்கள் கம்பனியின் நன்மைக்காக பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 மார்ச் 26 ஆந் திகதி வரையும் 2017 யூன் 06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கான பணிப்பாளர் சபை அனுமதி பெற்றிருக்கவில்லை. அந்த ஊழியர்களின் எண்ணிக்கை பிரகாரம், பொது மற்றும் பதிப்பாசிரியர் திணைக்களத்திற்காக பதவியணியினர் எண்ணிக்கை முறையே 658 மற்றும் 327 ஆகும். எவ்வாறாயினும், பொது மற்றும் பதிப்பாசிரியர் பிரிவின் உண்மையான பதவியணியினர் முறையே 964 மற்றும் 483 ஆக மொத்தம் 1447 ஆகும். அதனால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேலதிக பதவியணியினர் 462 ஆக | கம்பனியினால் 2012 யூலை 01 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு பதிலாக 2017 யூன் 6 ஆந் திகதி ஊழியர் எண்ணிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 2017 யூன் 6 ஆந் திகதிஊழியர் எண்ணிக்கையின் பிரகாரம் பொது நிர்வாகம் மற்றும் பதிப்பாசிரியர் நிர்வாகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை முறையே 658 மற்றும் 327 ஆகும். லேக்ஹவுஸ் நிறுவனத்திற்காக தயாரிக்கப்பட்டிருக் கொண்டிருக்கின்ற உபாய வழியான திட்டத்தினை அடிப்படையாக மற்றும் சுய செயற்பாட்டின் மற்றம் | பணிப்பாளர்சபையின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுவதுடன் அவற்றில் 434 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் காணப்பட்டவர்களாவர். ஊழியர் கிரயம் மீளாய்வாண்டில் மற்றும் சென்ற வருடத்திற்குள் வருமானத்தின் சதவீதமாக முறையே நூற்றுக்கு 62 மற்றும் நூற்றுக்கு 53 ஆக காணப்பட்டது. | திட்டமிடப்பட்டுள்ள அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கட்டமைப்பினால் (ஈஆர்பி, விற்பனை, தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு, வலைய வகுப்புக்குட்படுத்தல் எச்ஆர்ஐஎஸ் கட்டமைப்பு ஆகிய) உருவாகின்ற வினைத்திறனைக் கருத்திற் கொண்டு இந்த ஊழியர் எண்ணிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.. புதிய வெளியீடுகளை அறிமுகம் செய்தல், மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளை உயர்தரத்தில் பேணுதலுக்காக ஒப்பந்த அடிப்படையில் நிறுவனத்திற்கு புதியநியமனங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நேர்ந்தது. 2021 மே 17 ஆந் திகதியாகும் போது 921 நிரந்தர ஊழியர்களும் 435 ஒப்பந்த ஊழியர்களும் சேவையில் காணப்பட்டனர். ஊடகவியல் அமைச்சின் ஒருங்கிணைப்பின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டிலே ஆலோசகர் ஒருவருக்கு ரூபா 2,250,000 செலுத்தி தயாரிக்கப்பட்டிருந்த திறமைகளை கைப்பற்றிக்கொள்ளல், பதவியுயர்வு, விடுமுறைக் கொள்கை, செயலாற்றல் முகாமைத்துவம் போன்ற 7 கொள்கைகள் கம்பனியினால் பாவனைக்குட்படுத்தப்படுகின்ற போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது, செயலாற்றல் முகாமைத்துவக் கொள்கை மாத்திரமேயாகும். | ஆலோசகர் ஒருவரின் ஆலோசனையுடன் ஏழு கொள்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் செயலாற்றல் முகாமைத்துவக் கொள்கை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. ஏனைய கொள்கைகளின் அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அனைத்து கொள்கைகளுக்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |